சாட்சிகளின் வாக்குமூலம்

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**EA No.12/2013 in EP No.9/2012**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

வாக்குமூலம் – எ.ம.சா–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வராஜ் | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | காளப்பட்டி | வயது | : | |
| தாலுகா | : | | மாவட்டம் | : | கோயம்புத்தூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு நவம்பர் மாதம் 5ம் நாள் சாட்சியம்.

---

**முதல் விசாரணை**

நான் நிறைவேற்று மனுவின் மனுதாரர் ஆவேன். இந்த விண்ணப்பத்தில் 1ம் எதிர் மனுதாரர் ஆவேன். நான் எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 25.09.1990 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல்.
2. 22.07.2009 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல்.
3. 11.01.2011 தேதியிட்ட செட்டில்மெண்ட் ரத்து பத்திரம் சான்றிட்ட நகல்.

ஆகியவற்றை எதிர்மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**குறுக்கு விசாரணை**

1. சுப்ரமணியன் என்பவர் எனது அண்ணன் உறவு முறை ஆவார். அவர் எனது அப்பாவின் மூத்த தாரத்திற்கு பிறந்த மகன் ஆவார். சுப்ரமணியன் கடந்த 18.02.1991 தேதியில் காச நோயினால் நோய்வாய்ப்பட்டு காலமானார். சுப்ரமணியன் உயிருடன் இருந்தபோது என்னிடம் கடன் வாங்கி இருந்தாரா என்றால் வாங்கி இருந்தார். அவர் இறந்த பின்னர் மேற்படி கடனை வசூல் செய்வதற்காக வழக்கு ஏதேனும் தாக்கல்

செய்தேனா என்றால் ஆம். யாருக்கு எதிராக அந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் வசந்திக்கு எதிராக தாக்கல் செய்தேன்.

2. மேற்படி வழக்கை தாக்கல் செய்வதற்கான விவரங்களை வழக்கறிஞரிடம் யார் கொடுத்தார்கள் என்றால் நான் கொடுக்கவில்லை வசந்தி தான் கொடுத்தார். வசந்தியை யார் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. வசந்திக்கு எதிராக தாக்கல் செய்த வழக்குரையில் நான் தான் கையெழுத்து போட்டுள்ளேன். அந்த வழக்கானது கோயம்புத்தூர் முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 161/1994 என்ற எண்ணில் கோப்பில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். வசந்திக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கிற்கான வழக்குரை தங்கதிகளை வசந்தி தான் கூறினாரா என்றால் ஆம்.

3. அந்த வழக்கில் எனது வழக்கறிஞர் யார் என்றால் வழக்கறிஞர் திரு.மாதவன் ஆவார். வசந்தி கடன் கொடுக்க வேண்டி அவரே என் மீது வழக்கு போடுங்கள் என்று விவரங்களை சொல்லி வழக்கை தாக்கல் செய்ய வைப்பதற்கு பதிலாக அவரே என்னிடம் பணத்தை கொடுத்து இருப்பார் என்றும், வழக்கு தாக்கல் செய்வதற்கே அவசியம் ஏற்பட்டு இருக்காது என்றும் அவ்வாறு உள்ள நிலையில் நான் மேற்படி சங்கதிகளை பொய்யாக வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. சுப்பிரமணியன் வாங்கிய கடனை வசூல் செய்வதற்கு ஏன் நான் விஜயாவிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் வசந்தி பெயரில் உள்ளதாக அவர் சொன்னதால் அவர் பெயரில் போட்டேன். ஆனால் ஆவணம் அவர் பெயரில் இல்லை. ஆவணம் வசந்தி பெயரில் இல்லை என்ற விவரத்தை எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் 1996 ஆம் ஆண்டு நீதிமன்றம் பற்றுகை உத்தரவு பிறப்பித்த போது தெரிந்து கொண்டேன்.

5. 1996 ஆம் ஆண்டு வசந்தி பெயரில் சொத்து இல்லை என்று தெரிந்த பின்னர் நான் வழக்கை திரும்ப பெற்றுக் கொண்டேனா என்றால் இல்லை அளித்த கடனை திரும்ப வாங்காமல் நான் வழக்கை வாபஸ் வாங்க முடியாது. அ.வ.எண்.161/1994 வழக்கின் வழக்குரையில் சுப்பிரமணியனுக்கு வசந்தி மட்டும் தான் ஒரே வாரிசு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அசல் வழக்கு எண் 161/1994 வழக்கின் வழக்குப்பதிவேட்டின் சம்பந்தப்பட்ட பக்கத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண் 161/1994 வழக்கானது கோயம்புத்தூர் இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண் 2753/2006 என்ற எண்ணில் கோப்பில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். (**அசல் வழக்கு எண்**

**2753/2006 (அசல் வழக்கு எண் 161/1994) வழக்கின் வழக்குப்பதிவேட்டின் (Suit Register) சம்பந்தப்பட்ட பக்கத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.**)

6. அசல் வழக்கு எண் 2753/2006 வழக்கில் கோயம்புத்தூர் இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கடந்த 06.06.2007 தேதியில் தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அசல் வழக்கு எண் 2753/2006 வழக்கில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புரை சான்றிட்ட நகல் என்றால் சரிதான். (**அசல் வழக்கு எண் 2753/2006 வழக்கில் கடந்த 06.06.2007 தேதியில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புரை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.**)

7. மேற்படி அசல் வழக்கில் தீர்ப்பு பகிர்வதற்கு முன்பாகவே தீர்ப்புக்கு முந்தைய ஜப்தி உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று நான் மனு தாக்கல் செய்து ஜப்தி செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் இடை மனு எண். 230/2007 என்ற எண்ணில் ஜப்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை நீக்கம் செய்ய வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டு அதில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு என்றால் சரிதான். ( **இடை மனு எண். 230/2007 ஜப்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை நீக்கம் செய்ய கோரிய மனு மற்றும் மனு சார்பதிவாளருக்கு சார்வு செய்யப்பட்ட குறிப்பின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.**)

8. நான் விஜயா மீது தாக்கல் செய்ததாக சொல்லும் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தும் மேற்படி அசல் வழக்கில் ஜப்தி செய்யப்பட்டு மா.சா.ஆ– 20 ஜப்தி நீக்க உத்தரவின் மூலம் நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுப்பிரமணியனுக்கு வசந்தி மட்டும் தான் ஒரே வாரிசு என்று நான் ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கில் ஒப்புக்கொண்டு அதே வழக்கில் சொத்தினையும் ஜப்தி செய்து, பின்னிட்டு விஜயா உடன் கூட்டு சேர்ந்து அதே சொத்து சம்பந்தமாக தாக்கல் செய்து ஒரு தீர்ப்பாணை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

9. விஜயாவிற்கு சொத்தில் எந்தவிதமான உரிமையில்லை என்று தெரிந்தும் அவருக்கு எதிராக அவருடன் கூட்டு சேர்ந்து மோசடியாக அசல் வழக்கு 1100/2008 வழக்கினை ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்து, ஒரு மோசடியான தீர்ப்பானை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்த 2008 ஆம் ஆண்டே பல்லடம் மற்றும் திருப்பூரில் உள்ள நீதிமன்றங்களுக்கு நான் தாக்கல் செய்த வழக்கை விசாரிப்பதற்கான நிதிநிலை அதிகார வரம்பு இருந்தும்,

இங்கு தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் வெளியே தெரிந்துவிடும் என்பதால் நான் வேண்டுமென்றே கோயம்புத்தூரில் சென்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.05 18:29:04 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.